V11T www.Padasalai.Net www.CBSEtips.in

விருதுநகர் மாவட்டம்

காலாண்டுப் பொதுத் தேர்வு - 2023

-----

## வகுப்பு 11

## பொதுத்தமிழ்

கால அளவு: 3.00 மணிநேரம்+15 நிமிடங்கள் மதிப்பெண்கள்: 90

### பகுதி - I

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:** **14×1=14**

1) **பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுக்க:**

அ) முத்துலிங்கம் - யுகத்தின் பாடல்

ஆ) பவணந்தி முனிவர் - நன்னூல்

இ) சு. வில்வரத்தினம் - ஆறாம் திணை

ஈ) இந்திரன் - பேச்சு மொழியும் கவிதை மொழியும்

i) அ, ஆ ii) அ, ஈ iii) ஆ, ஈ iv) அ, இ

2) ஒரு திரவ நிலையில், நான் விரும்பும் வகையில் என்னிடம் கீழ்ப்படிந்து நடந்து கொள்ளும் எனது மொழி, எழுத்து மொழியாகப் பதிவு செய்யப்படுகிறபோது உறைந்து போன பனிக்கட்டியைப் போன்ற திடநிலையை அடைகிறது. இவ்வரிகள் உணர்த்தும் கருத்து

அ) மொழி என்பது திட, திரவ நிலையில் இருக்கும்.

ஆ) பேச்சு மொழி, எழுத்து மொழியை திட, திரவப் பொருளாக உருவகப்படுத்தவில்லை.

இ) எழுத்து மொழியை விட பேச்சு மொழி எளிமையானது.

ஈ) பேச்சு மொழியைக் காட்டிலும் எழுத்து மொழி எளிமையானது.

3) "வான் பொய்த்தது" என்ற சொற்றொடர் உணர்த்தும் மறைமுகப் பொருள்

அ) வானம் இடிந்தது ஆ) மழை பெய்யவில்லை

இ) மின்னல் வெட்டியது ஈ) வானம் என்பது பொய்யானது

4) கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்றவை

அ) மதிப்புக் கூட்டுப் பொருள்கள் ஆ) நேரடிப் பொருள்கள்

i) அ-மட்டும் சரி ii) ஆ-மட்டும் சரி

iii) இரண்டும் சரி iv) அ-தவறு, ஆ-சரி

5) **பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க:**

1. வெள்ளிவீதியார் - அ) புறநானூறு

2. அண்ணாமலையார் - ஆ) சி.சு. செல்லப்பா

3. வாடிவாசல் - இ) குறுந்தொகை

4. இளம்பெருவழுதி - ஈ) காவடிச்சிந்து

i) அ, ஆ, இ, ஈ ii) ஆ, ஈ, அ, இ iii) இ, ஈ, ஆ, அ iv) இ, ஈ, அ, ஆ

6) "இனிதென" - இச்சொல்லில் அமைந்த புணர்ச்சி விதிகளை வரிசைப்படுத்துக.

அ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும், உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே.

ஆ) தனிக்குறில் முன் ஒற்று உயிர் வரின் இரட்டும், உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்.

இ) உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே, தனிக்குறில் முன் ஒற்று உயிர் வரின் இரட்டும்.

ஈ) தனிக்குறில் முன் ஒற்று உயிர் வரின் இரட்டும், உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

7) துன்

அ) தீக்காயம் பட்டவர்
ஆ) தீயினால் சுட்டவர்
இ) பொருளைக் காக்காதவர்
ஈ) நாவைக் காக்காதவர்

8) திருக்குறளில் உள்ள மொத்த இயல்கள்

அ) 4 ஆ) 3 இ) 9 ஈ) 2

9) புறநானூற்றுப் பாடல்கள் சிலவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்

அ) வீரமாமுனிவர்
ஆ) பவணந்தி முனிவர்
இ) கால்டுவெல்
ஈ) ஜி.யு.போப்

10) ஒட்டு போடாத ஆகாயம் போல - இந்த உலகமும் ஒன்றே தான் இக்கவிதையில் பயின்று வருவது

அ) உவமை ஆ) உருவகம் இ) உள்ளுறை ஈ) இறைச்சி

11) 9 அடி சிற்றெல்லையும், 12 அடி பேரெல்லையும் கொண்ட நூல்

அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) அகநானூறு ஈ) ஐங்குறுநூறு

12) 'நனி இகக்கும்' என்ற சொல்லின் இலக்கணக்குறிப்பு

அ) உரிச்சொற்றொடர்
ஆ) வினைத்தொகை
இ) ஆறாம் வேற்றுமைத்தொகை
ஈ) பண்புத்தொகை

13) நேரொன்றாசிரியத்தளை எனப்படுவது

அ) காய் முன் நேர்
ஆ) காய் முன் நிரை
இ) கனி முன் நிரை
ஈ) மா முன் நேர்

14) "நெடுந்தொகை நானூறு" என்று அழைக்கப்படும் நூல்

அ) புறநானூறு ஆ) அகநானூறு இ) பதிற்றுப்பத்து ஈ) நற்றிணை

## பகுதி - II

### பிரிவு - 1

எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக: **3×2=6**

15) இனம், மொழி குறித்து இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.

16) எதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின - தொடரின் பொருள் யாது?

17) மருந்து எது? மருந்து மரமாக இருப்பவர் யார்?

18) "ஊனமில் ஊக்கமும் ஒளிரக் காய்த்த நல்
தீன் எனுஞ் செல்வமே பழுத்த சேணகர்" - இப்பாடலடிகளில் ஒளிரக் காய்த்தது எது? பழுத்தது எது?

### பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக: **2×2=4**

19) தமிழ்நாட்டின் மாநில மரம் - சிறுகுறிப்பு வரைக.

20) சங்க காலத்தில் தமிழ்மொழியின் நிலைப் பற்றி இராச மாணிக்கனாரின் கூற்று யாது?

21) ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

### பிரிவு - 3

எவையேனும் ஏழனுக்கு விடை தருக: **7×2=14**

22) உயிரீறு, மெய்யீறு - விளக்குக.

23) **தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக:**
ஓர் பயிர் பறவை வளர வேண்டும் அழகான தண்ணீர் மயில்

24) **மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக:**
வலி, வ

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

25) **வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக:**

அ) கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மைத் தீமைகளை புரிந்து பேசுவர்.

ஆ) தாமரை தடாகத்தில் மீன்கள் துள்ளி பாய்ந்தது.

26) **சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க:**

பிண்ணாக்கு

27) அன்று, அல்ல என்பனவற்றுக்கான பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க.

28) **கீழ்க்காணும் வடமொழிச் சொற்களைத் தமிழாக்குக:**

அ) வித்தியா ஆ) சாகரம்

29) **ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக:**

அ) பெருங்கல் ஆ) மனையென

30) **ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக:**

அ) மறுத்து ஆ) வைத்தார்

## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக:** **2×4=8**

31) நூல் ஒன்றின் முகவுரையில் இடம்பெற வேண்டுவனவாக நன்னூல் எவற்றைக் குறிப்பிடுகிறது?

32) காற்றில் ஆடும் புல் வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு யாது? ஏன்?

33) ஏவல் மறுக்கும் சிறு விளையாட்டி அறிவும் ஒழுக்கமும் யாண்டு உணர்ந்தனள் கொல் - **இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

34) ''கலைவளர் மறையவர் கருத்தில் எண்ணியது'' - யாது?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக:** **2×4=8**

35) ''என் உயிர் தமிழ் மொழி என்பேன்'' என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப்பற்றினை எழுதுக.

36) மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.

37) சமணப் பள்ளிகளும் பெண்கல்வியும் - குறிப்பு வரைக.

38) ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதி வழி எடுத்துக்காட்டுக.

### பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக:** **3×4=12**

39) வேற்றுமையணி **(அல்லது)** உருவக அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

40) **இலக்கிய நயம் பாராட்டுக: (மையக்கருத்துடன் மூன்று நயங்களை எழுதுக)**

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
 பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சிலமூடர் - நல்ல
 மாதர் அறிவைக் கெடுத்தார்.
கண்கள் இரண்டினில் ஒன்றைக் - குத்தி
 காட்சி கெடுத்திட லாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்
 பேதமை யற்றிடும் காணீர்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

41) பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு தொடர்புபடுத்தி எழுதுக:

அ) தன்கையே தனக்குதவி (அல்லது)

ஆ) வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்

42) தமிழாக்கம் தருக:

i) A picture is worth a thousand words.

ii) Roads were made for journeys not destinations.

iii) Education is the most powerful weapon, which you can use to change the world.

iv) Culture does not make people. People make culture.

43) புதிர்களுக்கான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக:

(கம்பி, மை, வள்ளை, மதி, இதழ், ஆழி)

அ) எலியும் நுழையும்; எழிலரசி கையும் நுழையும்.

ஆ) அடிக்கவும் செய்யலாம்; கோடைக்குக் கூழாகவும் குடிக்கலாம்.

இ) கண்ணிலும் எழுதலாம்; வெண் தாளிலும் எழுதலாம்.

ஈ) அறிவின் பெயரும் அதுதான்; அம்புலியின் பெயரும் அதுவே தான்.

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க: **3×6=18**

44) அ) வாழ்வின் உயர்வுக்கு உறுதுணையாக நீங்கள் கருதும் குறட்பாக்கள் சிலவற்றை விளக்கிக் கட்டுரையாக்குக.

(அல்லது)

ஆ) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தெஙன்கரை நாட்டுப் பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரிக்க.

45) அ) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சு மொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க.

(அல்லது)

ஆ) இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழர்களின் இருப்பிடப் பெயர்களும் இயற்கையோடு இயைந்து இருந்தன - கூற்றினை மெய்ப்பிக்க.

46) அ) வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துக்களை விளக்குக.

(அல்லது)

ஆ) பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை?

## பகுதி - V

அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக: **4+2=6**

47) அ) "ஏடு தொடக்கி வைத்து" எனத் தொடங்கும் 'யுகத்தின் பாடல்'.

ஆ) 'பகை' என முடியும் குறளை எழுதுக.

----------

www.Padasalai.Net